**பிரஸார் பாரதி**
**அகில இந்திய வானொலி, சென்னை-4**
**18 09 2025 THURSDAY 12 40 PM**
**வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1) நேபாளத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

2) மத்திய பட்ஜெட்டில் திறன் பயிற்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

3) சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தத்தால். அத்தியாவசிய பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

4) சுதந்திர போராட்ட வீரர் இரட்டைமலை சீனிவாசனின் நினைவு தினத்தை ஒட்டி. மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மரியாதை செலுத்தியுள்ளார்.

5) உலக கோப்பை பாரா வாள் வீச்சுப் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>><<<<

நேபாளத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நேபாளத்தின் இடைக்கால பிரதமர் திருமதி. *Sushila Karki*-யுடனான பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

நாளை நேபாளத்தின் தேசிய தினம் கொண்டாடப்படுவதை முன்னிட்டு, அந்நாட்டு பிரதமருக்கும், மக்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>><<<<

மத்திய பட்ஜெட்டில் திறன் பயிற்சிக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதாக நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தர மேலாண்மை குறித்த கருத்தரங்கில் பேசிய அவர், மனிதவள மேம்பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் தலா ஒரு தொழிற்பயிற்சி நிலையம் வீதம், மத்திய அரசின் உதவியுடன் மேம்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

ஐஐடி போன்ற உயர்கல்வி நிறுவனங்களில், செயற்கை நுண்ணறிவு சார்ந்த ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு, கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது மட்டுமின்றி, தர மேலாண்மையை உறுதி செய்து, உற்பத்தி மற்றும் சேவை துறைகளை மேம்படுத்துவதும் அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

இந்த மையங்களில் வேளாண்மை, கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளில் பயிற்சி அளிக்க சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்றும் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறினார்.

>>>><<<<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தத்தால். அன்றாட வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் வேளாண் விளைபொருட்கள், குறைந்த விலையில் கிடைக்கும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பொருட்களின் விலை குறையும் போது அவற்றின் நுகர்வு கணிசமாக அதிகரிக்கும் என்று கூறினார்.

*மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பெற்ற பிறகு, வருமான வரிச் சட்டம், சரக்கு மற்றும் சேவை வரி சட்டங்களில் பெருமளவு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.*

*ரயில் பயணிகளின் பாதுகாப்பிற்காக ஒரு லட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக கூறிய திரு. அஷ்வினி வைஷ்ணவ், அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக 2014ஆம் ஆண்டு 170-ஆக இருந்த ரயில் விபத்துகளின் எண்ணிக்கை தற்போது, 31-ஆக குறைந்துள்ளது என்றும் தெரிவித்தார்.*

*>>>><<<<*

*மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இரண்டு நாள் பயணமாக இன்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் செல்கிறார்.*

*அங்கு நடைபெறவுள்ள முதலீட்டுக்கான இந்தியா - ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உயர்மட்டக் குழு கூட்டத்தில் பங்கேற்கும் அவர், இரட்டை வரி விதிப்பு மற்றும் இருநாடுகளின் மத்திய வங்கி சார்ந்த அம்சங்கள் குறித்து அபுதாபி முதலீட்டு ஆணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு. Sheikh Hamed Bin Zayed Al Nahyan-னுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.*

*ஐக்கிய அரபு எமிரேட்டின் வெளிநாட்டு வர்த்தக அமைச்சருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ள பியூஷ் கோயல், இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடனும் கலந்துரையாடவுள்ளார்.*

*>>>><<<<*

*நடப்பாண்டில் விமானப் பயணிகளின் எண்ணிக்கை 25 கோடியாக அதிகரித்துள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.*

*தில்லி அருகே நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், Hindon விமான நிலையத்தில் கடந்த 2020ஆம் ஆண்டு வரை ஒரே ஒரு விமானம் மட்டுமே இயங்கி வந்த நிலையில், தற்போது அங்கிருந்து 16 நகரங்களுக்கு விமானங்கள் இயக்கப்படுவதாக கூறினார்.*

*விமானப் பயணிகளுக்கு உலக தரத்திலான சேவைகள் வழங்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.*

*பயணிகளுக்கான சேவைகளை அதிகரிக்கும் நோக்கிலேயே பயணிகள் சேவை தினம் கடைபிடிக்கப்படுவதாகவும் திரு. ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.*

*>>>><<<<*

*சவுதி அரேபியா – பாகிஸ்தான் இடையிலான ராணுவ உடன்படிக்கையால் இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சுறுத்தல்கள் குறித்து ஆய்வு செய்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.*

*இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்தியா மட்டுமின்றி தெற்காசிய அளவிலும், உலக அளவிலும் இந்த ஒப்பந்தத்தால் ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து ஆய்வு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*நாட்டு நலனை பாதுகாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.*

*சவுதி அரேபியா-பாகிஸ்தான் இடையே நேற்று கையெழுத்தான ராணுவ உடன்படிக்கையின் படி, இரு நாடுகளில் எந்தவொரு நாட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டாலும், அதனை இரு நாடுகள் மீதான தாக்குதலாக கருத வகை செய்யப்பட்டுள்ளது.*

*>>>><<<<*

*ஆப்கானிஸ்தானில் லஷ்கர் இ தொய்பா மற்றும் ஜெய்ஸ் இ முஹமது தீவிரவாதிகளின் செயல்பாடுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்று ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.*

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாக, பாதுகாப்பு கவுன்சிலில் நடைபெற்ற விவாதத்தில் பேசிய ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர தூதர் திரு. *Parvathaneni Harish*, ஐ.நா-வால் தடை விதிக்கப்பட்ட இந்த அமைப்புகளை சேர்ந்தவர்கள், ஆப்கானிஸ்தானை பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்று தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு நிலவரத்தை இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும், அந்நாட்டிற்கான சர்வதேச உதவிகளுக்கு இந்தியா உறுதுணையாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு ஆப்கானிஸ்தான் கண்டனம் தெரிவித்ததை இந்தியா வரவேற்பதாகவும் அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தான் மக்களுக்கு உதவ புதிய திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்றும் திரு. *Parvathaneni Harish* கேட்டுக் கொண்டார்.

>>>><<<<

சுதந்திர போராட்ட வீரரும், சமூக சீர்திருத்தவாதியுமான இரட்டைமலை சீனிவாசனின் நினைவு தினத்தை ஒட்டி. மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மரியாதை செலுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், சமூகத்தில் ஏற்றத்தாழ்வற்ற நிலையை உருவாக்க தமது கருத்துக்களின் மூலம் முயற்சி மேற்கொண்டவர் இரட்டைமலை சீனிவாசன் என்று குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்திற்கு முன்பே, சென்னை மாகாண சட்டமன்ற உறுப்பினராக பணியாற்றிய அவர், ஷெல்யூல்டு வகுப்பினரின் முன்னேற்றத்திற்காகவும், உரிமைகளுக்காகவும் பாடுபட்டவர் என்றும் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

*2027ஆம் ஆண்டு, மார்ச் மாதத்திற்குள் மனிதர்களுடன் கூடிய விண்கலத்தை விண்ணில் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.*

*கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதன் முதற்கட்டமாக, எந்திர மனிதனுடன் கூடிய விண்கலம் இந்த ஆண்டு இறுதிக்குள் அனுப்பப்படும் என்று கூறினார்.*

*(சவுண்ட் பைட் – நாராயணன் 51 செகண்ட்ஸ்)*

>>>><<<<

*உலக கோப்பை பாரா வாள் வீச்சுப் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.*

*இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் குழுப் பிரிவில் இந்தியா, 20-18 என்ற புள்ளிக்கணக்கில் ஜெர்மனியை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.*

>>>><<<<

*சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி.வி. சிந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*Shenzhen-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 21-15 என்ற செட்கணக்கில் தாய்லாந்தின் Pornpawee Chochuwong-ஐ வென்றார்.*

>>>><<<<

*இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tasnim Mir காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*Riau-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்றில் அவர், 21-5, 21-16 என்ற செட்கணக்கில் கொரியாவின் Kim Min Sun-ஐ வென்றார்.*

-----------

***துனிஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Manas Dhamne – Jaishnav Shinde இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.***

***>>>><<<<***